அந்தப் பணியைப் பொறுத்த அளவில் இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது. இப்போது இருக்கக்கூடிய வேலையையும் ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்த இரயில்வே மேம்பால வேலையையும் இர்க்கான் கம்பெனி—இரயில்வே துறையினைச் சார்ந்த அந்த கம்பெனி—செய்வதற்கு ஒப்புதல் தந்துவிட்டது. எனவே, அதன்மூலம் அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. புறவழிச் சாலையைப் பொறுத்த அளவிலே, அந்தப் போக்குவரத்தினுடைய செறிவைப் பொறுத்து, அந்தப் பகுதியினுடைய போக்குவரத்தினுடைய அடர்வைப் பொறுத்து, அதற்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *140*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

பள்ளிக் கட்டடம்

***22944—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, நாகல்கேணியில் ஆதி திராவிடர் பள்ளிக் கட்டடம் மற்றும் கழிப்பிடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், நாகல்கேணி, ஆதி திராவிடர் நலப் பள்ளிக் கட்டடம், ரூபாய் *2* இலட்சத்து *99* ஆயிரத்து *809* செலவில் சீரமைக்கப்பட்டு, மேலும் *2006-2007* ஆம் ஆண்டில் இப்பள்ளிக்குப் புதிய கழிவறை *80* ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தற்போது மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

2008 ஏப்ரல் 22]

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் சற்றேறக்குறைய 6, 7 பள்ளிகள் இருந்தாலும், நாகல்கேணி பகுதி, பம்மல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இருக்கிற காரணத்தினால், 1,367 மாணவர்கள் அந்தப் பள்ளியிலே படிக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குச் சற்றேறக்குறைய 29 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அவற்றிலே 15 வகுப்பறைகள்தான் இருக்கின்றன. இன்னும் 14 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அதைப்போல, மாணவ, மாணவிகள் பயன்படுத்துகின்ற கழிப்பிட வசதிகள் அங்கு போதுமான அளவிலே இல்லை. அங்கே இருக்கிற ஆதி திராவிடர் நலப் பள்ளி சற்றேறக்குறைய 3 ஏக்கருக்கு மேல் உள்ள நிலப் பரப்பில் இருக்கிறது. விளையாடுவதற்குத் தேவையான மைதானம் இருக்கிறது. ஆனால், பள்ளி சரியான முறையிலே பராமரிக்கப்படாத காரணத்தினால், இன்னும் வசதிகள் தேவையாக இருக்கிற காரணத்தினால், நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்னும் வசதிகளைச் செய்து தருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், நாகல்கேணி ஆதி திராவிடர் நலப் பள்ளியில் சுமார் 1,367 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். இப்பள்ளிக்கு 29 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. ஆனால் 15 வகுப்பறைகள்தான் அங்கு உள்ளன. மீதமுள்ள 10 ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்ட வகுப்பறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. மற்றும் இந்தப் பள்ளிகளில் மேலும் 24 வகுப்பறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு 75 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. தற்போது பொதுப் பணித் துறையால் அந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் உயர்த்தப்பட்டுள்ளதால், 'தாட்கோ'-வால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பள்ளியில் புதிதாக 24 வகுப்பறைகள்கொண்ட கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

[2008 ஏப்ரல் 22

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லிய அந்த பதிலை நான் ஏற்றுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். இன்றைக்கு அந்தப் பள்ளிக்குத் தனியாகக் கணினி ஆய்வகம் தேவைப்படுகிறது. அதைப்போல, பாலவாக்கம், தாம்பரம், அனகாபுத்தூர், பதுவஞ்சேரி, பொழிச்சலூர், சிட்லப்பாக்கம் பகுதிகளில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் இருக்கின்றன. குறிப்பாக, பாலவாக்கம் பள்ளிக்குத் தேவையான கழிப்பிட வசதிகள் அந்தப் பகுதியிலே இல்லாத காரணத்தினால் மாணவ, மாணவிகளுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. வரி வசூலிலே போதுமான நிதி ஆதாரம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் புதிய சட்டத்தின்மூலமாக நகராட்சிகளுக்குப் பெருகி இருக்கின்றது. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நகராட்சியை அணுகி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக, நகராட்சியிலே இருக்கின்ற ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு, இந்த இரண்டாண்டுகளில் மட்டும் ரூ.*35.93* இலட்சம் செலவில் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கணினி தேவைப்படுவதாகக் குறிப்பிட்டு இருந்தார்கள். அதேபோல், பாலவாக்கம் பள்ளியில் கழிப்பிட வசதி வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். அவற்றை இந்த நிதி ஆண்டில் பரிசீலித்து செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]